சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 28.08.2026 SC. 129/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுரேஷ்குமார் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | PW 11 | | | |

---

முதல் விசாரணை

நான் தற்சமயம் திருநெல்வேலி மாநகர குற்ற புலனாய்வு பிரிவில் காவல் துறை துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். 25.02.2019 அன்று கூடலூர் வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அதற்கு முன்பாக 03.01.2019 அன்று கூடலூர் தெற்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முருகேசன் என்பவரால் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்த கூடலூர் தெற்கு காவல் நிலைய குற்ற எண். 5/2019 பிரிவுகள் 294b, 355, 324, 506 (II) என்ற வழக்கானது பின்னர் அன்றைய தினம் காவல் ஆய்வாளராக இருந்த ஷாஜகான் என்பவரால் முதல் நிலை புலன் விசாரணை செய்யப்பட்டு இவ்வழக்கானது சட்டபிரிவு இ.த.ச. 294b, 355, 324, 307 பிரிவுகளின் கீழ் சட்ட மாறுதல் செய்யப்பட்டு தனிஅறிக்கையை உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமனற்ததிற்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் அவர் பணிமாறுதலில் சென்ற பின்னர் நான் 25.02.2019 அன்று மேல் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்ததில் இவ்வழக்கின் 1ம் எதிரி ராஜா கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் இருந்து வந்தார். எதிரிகள் கீதா, மீனா, குமாரி ஆகியோர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் முன் ஜாமின் பெற்று பிணையில் சென்று உள்ளார்கள்.

மேற்படி 1ம் எதிரி சம்பவத்தில் பயன்படுத்திய அரிவாளை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஏற்கனவே ஒப்படைத்துள்ளார்கள். மேலும் இவ்வழக்கின் வாதி நல்லதம்பி என்பவரை அரிவாளால் வெட்டியதில் அவரது இடது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டது என்பது எனது விசாரணையில் தெரிய வந்தது. எனவே இந்த வழக்கு சம்பந்தமாக புலன் விசாரணையில் குற்றவழக்கின் சட்டபிரிவானது 294b, 355, 324, 307, R/W 109 IPC ஆக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன், இந்த வழக்கின் 01.08.2019 அன்று 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட அரிவாளை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் RPR No. 56/2019 பெற்று, இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரையும் வாய் மொழியாக விசாரித்தும், அவர்கள் ஏற்கனவே புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஷாஜகான் என்பவரிடம் கூறியதையே என்னிடம் மீண்டும் கூறியதால்

நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்னர் 21.08.2019 அன்று இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் 1 முதல் 4 எதிரிகள் மீது 294b, 355, 324, 307, R/W 109IPC ஆக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

நல்லதம்பி கொடுத்த புகாரில் அவர் எதிரிகள் அவரை கொலை செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டியதாக தனிப்பட்ட வாசகம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால், வெட்டி கொல்லு என்று 2ம் எதிரி, 1ம் எதிரியிடம் கூறியதாக வாசகம் உள்ளது. அந்த புகாரின் தன்மை படி கொலை மிரட்டலின் கீழ் 506(II) என்ற பிரிவு வராது என்றும், எதிரிகளை காவல் அடைப்பு செய்யவேண்டும் என்பதற்காக வேண்டுமென்றே குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர் கொடுத்த அ.சா–ஆ1 புகாரில் தேதிகளும், வாசகங்களும், அடித்தல், திருத்தலாகவும், மேல் அழுத்தியும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் பதட்டத்தில் எழுதியிருக்கலாம். அவரை பரிசோதித்து சிகிச்சை அளித்த மருததுவர் நல்லதம்பி நல்ல மனநிலையில் சுயநினைவோடு இருந்தார் என சான்று வழங்கியுள்ள நிலையில் பதட்டத்தில் இருந்தார் என நான் கூறுவது தவறானது என்றால் சரியல்ல.

புகாரை நான் வாங்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை Column 14ல் புகார்தாரரிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகளிடம் நான் தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் அ.சா.3 பூங்கொடி, சம்பவ இடத்தில் 10க்கு மேற்பட்ட நபர்கள் இருந்ததாகவும், அவர்கள் சண்டையை விலக்கிவிட்டதாக என்னுடைய விசாரணையில் சொன்னாரா என்றால் சொல்லியுள்ளார். எனக்கு முன்பு புலன் விசாரணை செய்த ஆய்வாளர் ஷாஜகான் மற்றும் சார்பு ஆய்வாளர் முருகேசனிடம் 10 நபர்கள் சம்பவ இடத்தில் சண்டையை விலக்கிவிட்டதாக அவர் சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். 10 நபர்கள் யார் என்று நான் விசாரிக்கவில்லை. குறிப்பிட்ட நபர்களை மட்டும் விசாரித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

நான் சொல்வது போல் சம்பவ இடம் சென்று தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்பதால் தான் அவர்களை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.3 பூங்கொடி, அ.சா.1 கையில் இருந்த காயத்தை நான் பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அது தவறு, என்னுடைய விசாரணையில் பார்த்தாக கூறியுள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் நல்லதம்பி மீது இரத்தக்கறை படிந்திருந்தது என்றும், சட்டையில் இரத்தம் இருந்தது என்றும், சாட்சியம் அளித்துள்ள நிலையில், இரத்தம் பட்ட மண், மற்றும் இரத்தம் பட்ட சட்டையை கைப்பற்றி இரசாயண பகுப்பாய்வுக்கு முந்தையை புலன் விசாரணை அதிகாரி ஆய்வாளர் ஷாஜகான், சார்பு ஆய்வாளர் முருகேசன் அனுப்பவில்லை. அரிவாள் மட்டும் கைப்பற்றப்பட்டது.

அரிவாளில் 1ம் எதிரி கைரேகை எதுவும் எடுக்கவில்லை. அதேபோல் அரிவாளில் கைரேகை உள்ளதா என்பதை ஆய்வு செய்ய ச.பொ.1 அரிவாளை பகுப்பாய்வுக்கு

அனுப்பவில்லை. எனது விசாரணையில அ.சா.3, பூங்கொடி, எதிரிகள் அ.சா.1 ஐ காலை பிடித்து 10 அடி தூரம் வரை இழுத்து சென்று அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டது என என்னுடைய விசாரணையில் அவர் சொல்லவில்லை. பூங்கொடி, என்னிடம் அ.சா.1 அரிவாளை எடுத்து அவரிடம் ஒப்படைத்தாக என்னுடைய விசாரணையில் எதுவும் சொல்லவில்லை. அதன்பின்னர் தான் அரிவாள் காவல் துறையில் ஒப்படைக்கப்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. அரிவாளில் இரத்தக்கறை இருந்ததாக அத்தாட்சி, படிவம் 95ல் உள்ளதா என்றால் சொல்லவில்லை.

அ.சா.3 இரத்தக்கறை அரிவாளில் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் வழக்கு சொத்தை நாங்களாக உற்பத்தி செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் ஐயப்பன் கோவில் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் அய்யப்பன் கோவில் அருகே நடைபெற்றது என அரசு தரப்பு சாட்சிகள் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. ஐயப்பன் கோவில் சற்று தூரத்தில் இருந்ததால் அது காட்டப்படவில்லை. மாதிரி வரைபடம் சம்பவ இடம் செல்லாமல் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 புகாரை அவரது நண்பர் தான் எழுதிகொடுத்தாக என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரை அ.சா.1 காவல் நிலையம் சென்று தான் கொடுத்தாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் மருத்துவமனை சென்று அ.சா.1 டம் வாக்குமூலம் பெற்று, வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றும், அ.சா.1 அந்த பகுதி கவுன்சிலர் என்பதால் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்ய காவல்நிலையத்தில் புகார் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் வெளக்கமாறு எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அ.சா.1 வழக்கு சொத்தான அரிவாளை 1ம் எதிரியிடமிருந்து பிடுங்கி பாண்டி டீக்கடையில் பாண்டி மனைவியிடம் கொடுத்தாக என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. பாண்டி டீக்கடையில் இருந்து அரிவாள் எடுத்துவரப்பட்டது என எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் சார்பு ஆய்வாளர் முருகேசன் 1ம் எதிரியிடம் பெற்று வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பு வழக்கு உள்ளது என்றால் சரிதான்.

ஷாஜகான் சட்டமாறுதல் அறிக்கை தயார் செய்யவில்லை என்றும், சார்பு ஆய்வாளர் முருகேசன் தான் தயார் செய்தார் என என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ஆய்வாளர் ஷாஜகான் தான் சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். ஆய்வாளர் ஷாஜகான் தான் சட்ட மாறுதல் அறிக்கையை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு 16.00 மணிக்கு தகவல் கிடைத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டு நகலில் காயம் பட்ட நல்லதம்பி இரவு 7.20 மணிக்கு சிகிச்சைக்காக சேர்ந்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் மருத்துவமனையில் இரவு7.20 மணிக்கு அனுமதிக்கப்பட்ட

நிலையில் மாலை 4 மணிக்கு தகவல் கிடைத்தாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லியிருப்பதிலிருந்தே சம்பவம் குறித்து முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள நேரத்தில் எந்த ஒரு தகவலும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

விபத்து பதிவேட்டு நகலில் 03.01.2019ம் தேதி மாலை 4.30 மணிக்கு ஐயப்பன் கோவில் அருகே நடந்ததாக அ.சா.1 மருத்துவரிடம் தெரிவித்தார் என்றால் விபத்து பதிவேட்டு நகலில் அவ்வாறு தான் உள்ளது. விபத்து பதிவேட்டு நகலில் அவர் சுய நினைவில் தான் இருந்தார் என சொல்லப்பட்டுளளது என்றால் சரிதான். அவர் கொடுத்த புகாரில் 03.01.2019ம் தேதி மதியம் 2.30 மணிக்கு நடைபெற்றதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1க்கு ஏற்பட்ட சிராய்ப்பு காயங்கள் அவர் இருசக்கர வாகனத்தில் இருந்து விழுந்து தனிச்சையாக ஏற்பட்ட காயங்கள் என்றும், அந்த காயங்களுக்கும், எதிரிகளுக்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல. மருத்துவ பதிவேட்டு நகலில் அ.சா.1 சிராய்ப்பு காயங்கள் உள்ளதாக தான் இருந்தது என்றும், வெட்டுக்காயங்கள் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 ஐ யாரும் அரிவாளால் வெட்டவில்லை என்றும், அதனால் தான் அவருக்கு வெட்டு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

அ.சா.1 ஐ 1ம் எதிரி வெட்டியதாக பொய்யான ஒரு புகாரைப்பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பொதுவாக மருத்துவர் கொடுங்காயம் என சான்று வழங்கினால் தான் சட்ட மாறுதல் செய்யப்படும் என்றால் சரியல்ல. இ.த.ச,பிரிவு 307 ன் படி வழக்கு பதிவு செய்யக்கூடிய மருத்துவ காரணங்களோ, மருத்துவ அறிக்கையோ இல்லாத நிலையில் குற்ற சட்ட மாறுதல் அறிக்கை தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு முன்பு வழக்கை விசாரித்த முருகேசன், ஆய்வாளர் ஷாஜகான் ஆகியோர்கள் முறையாக புகார் பெற்று வழக்கு பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், 1ம் எதிரியை கைது செய்து அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றும், அவர்கொடுத்த தகவலின் அடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பார்வை மகஜர், வரைபடம், ஒப்பபுதல் வாக்குமூலம், அத்தாட்சி ஆகியவை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நானும், எனக்கு முன்பாக விசாரணை செய்த ஆய்வாளர் ஷாஜகானும், சாட்சிகளை தனி தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

அ.சா.1 நல்லதம்பி சம்பவம் சமயம் கூடலூர் 13வது வார்டு கவுன்சிலர் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயம் தம்பனம்பட்டியில் அரசு குடியிருப்பு மனைகள் ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வந்தது. அதே பகுதியில் தான் எதிரிகள் கடை மற்றும், குடியிருப்பில் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் குடியிருந்ததை அகற்றிவிட்டு தான் புதிதாக வீட்டு மனை கொடுக்க முயற்சித்தார்கள் என்றால் சரியல்ல. அரசு புதிய வீட்டுமனை கொடுப்பதற்கு 1ம் எதிரி இடைஞ்சலாக

இருப்பார் என்பதால் தான் அ.சா.1 கவுன்சிலர் என்பதால், அவரும், அரசு அதிகாரியும் சேர்ந்து கொண்டு கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் 1ம் எதிரி கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு அரசால் வழுங்கப்பட்டும் இலவச மனை பட்டா பெற தகுதி இல்லை என்பதால் மேற்படி அரசு அதிகாரிகள் மீது காழ்ப்புனர்ச்சியாக குற்ற சம்பவம் நடைபெற்றது. மேற்படி விவரத்தை குற்ற இறுதி அறிக்கையில் சொல்லவில்லை.

தற்சமயம் எதிரிகளுக்கு அரசு மனை பட்டா வழங்கப்பட்டு அவர்கள் அங்கு தான் இன்று வரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அரசு அதிகாரிகளுக்கு ஆதரவாக அ.சா.1 னிடம் பொய் புகார் பெற்று குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும், நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும், இந்த குற்ற சம்பவத்திற்கும் எந்த சம்பந்தம் கிடையாது என்றும், நான் ஒருதலை பட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்குக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

1)_________________

என் முன்பு Microsoft Teams Video Meeting மூலமாக விசாரணை நடைபெற்றது.

2)______________

Taken down by me/before me through teams VC interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct

M SHIVAJI CHELLIAH

Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.08.28 13:26:01 +0530

Sub Judge

Uthamapalayam.